[30th November 1970

Appendix I

[*Vide* answer to Starred Question No. 22]

இந்திய அரசால் வரையறுக்கப்பட்டு 22—5—70-ல் இருந்து நடைமுறைக்கு வந்த கொள்கைப்படி, இரும்பு எஃகு வேண்டுவோர், உச்ச வரம்பு இன்றி, தேவைப் பட்டியல்களை இணைத்தொழில் குழுவின் மூலம், முக்கிய எஃகு உற்பத்தியாளர்களிடம் பதிவு செய்து, வழங்குதல் பெறலாம். மேலும், வாகன் அளவுக்கு இரும்பை வரவழைத்து உபயோகிக்க முடியாத சிறு தொழில்களுக்கும், அரசினரின் சிறுதொழில் பிரிவுகட்கும் தேவைப்படுகிற இரும்பு எஃகை சிறு தொழில் வளர்ச்சி வாரியத்தோடு இணைக்கப்பட்டு, சென்னை, மதுரை, போதனூர் ஆகிய இடங்களில் இயங்கும் விநியோகிக்கும் பிரிவுகள், தேவைப்பட்டியலை, முக்கிய உற்பத்தியாளர்களிடம் கொடுத்து, இரும்பு எஃகு பெற்று முன்போலவே, தொடர்ந்து விநியோகம் செய்து கொண்டு வரும், உள் நாட்டில் கிடைக்கும் மூலப் பொருட்களை எம்.எம்.டி.சி மூலம் பெறவோ அல்லது நேராக இறக்குமதி செய்யவோ சிறுதொழில் பிரிவுகளுக்கு, தொழில் வணிக இயக்குநர் இன்றியமையாததெனக் குறிப்பிடும் சான்றிதழ்களை, இந்திய அரசின் இறக்குமதிக் கொள்கைப்படி வழங்குகிறார்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS